***04.06.2025***

**SC No**.580/2018 **PW**. 7. **மனையழகன்**

எதிரி ஆஜர்.

**இந்நீதிமன்ற Crl.MP.No. 2250/2024, நாள் 13.05.2025 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தற்போது சென்னையில் நுங்கம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். இவ்வழககின் சம்பவம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தன்று வகுப்பில் attendance எடுக்கவில்லை. நான் எதிரியை இதுவரை பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. நான் அவரைப் பார்த்துள்ளேன். சம்பவம் நடக்கும் போது எதிரி எங்கள் கல்லூரியில் guest lecturer ஆக வேலை பார்த்து வந்தார்,. சம்பவ தினம் அன்று நான் காலை 09.30 மணிக்கு கல்லூரிக்கு வந்தேன். போலிசார் விசாரணையின் போது நான் எனது ID Card ஐக் காட்டினேனா என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக கல்லூரியில் ID Card கொடுப்பார்கள். கல்லூரியில் எனக்கு கொடுக்கப்பட்ட எனது ID Card ஐ வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டால் ஒப்படைக்க தயாராக உள்ளேன். பொதுவாக, எங்கள் படிப்பு முடிந்தவுடன் இதழியல் துறை தலைவர் எங்களுக்கு பரிந்துரை கடிதம் கொடுத்தால் தான் எங்களுக்கு எளிதாக வேலை கிடைக்கும் என்றால் சரியல்ல. நாங்கள் படிப்பு முடித்து வெளியே வந்த பிறகு, பொதுவாக எங்கள் துறை தலைவரிடம் பழகி வருவோம் என்றால் சரியல்ல. கடந்த 7 ஆண்டுகளாக நான் பேசியது இல்லை. போனிலும் பேசியதில்லை. எதிரியை காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்த போது, காவல் நிலையத்தில் வைத்து எதிரியைப் பார்த்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரியைப்

பிடித்து போலிசில் ஒப்படைத்தோம். நான் சொல்லுவது போல், நானும் என்னைச் சார்ந்தவர்களும் எதிரியைப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் எதிரியை ஏற்கனவே பிடித்து வைத்திருந்த போது தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரி வழக்கமாக இருக்கும் இடம் தெரியும். அதை நான் தான் போலிசாரிடம் சொன்னேன். எந்த இடத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. சாட்சி பின்னிட்டு வடபழஞ்சி பஸ் நிறுத்தத்தில் வைத்து கையெழுத்து போட்டதாகச் சொல்கிறார். நான் அந்த கல்லூரியில் படிக்கவே இல்லை என்றும் அவ்வாறு படித்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. போலிசாரும், துறைத்தலைவரும் கேட்டுக் கொண்டதற்காகத்தான் நான் பொய்யாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வடபழஞ்சி போலிஸ் ஸ்டேசனில் பிடித்ததாக போலிசார் என்னிடம் சொல்லித்தான் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம்,
மதுரை